**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**M.C.O.P.No.172/2022 C/w.174/2022**

22025ஆம் வருடம் நவம்பர் மாதம் 10ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு .சௌந்தரபாண்டியன் (எ.ம.சா.2) | தொழில் | : சட்ட மேலாளர், மேக்மா HDI General Insurance Company Ltd., Chennai. |
| த/பெ. | : திரு. தண்டபாணி | வயது | : 28 |
| க/பெ. | : திரு. | | |
| கிராமம் | : சென்னை | இனம் | : ஆண் |
| தாலுகா | : சென்னை | நாள் | : 10.11.2025 |
| மாவட்டம் | : சென்னை | | |

<u>முதல் விசாரணை :–</u>

இம்மனுவில் மனுவில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணிபுரிகிறேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது.

எ.ம.சா.ஆ.3 நிபந்தனையுடன் கூடிய பாலிசி நகல்

மனு தள்ளுபடியாக கேட்டுக்கொள்கிறேன்.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. TN 57 AR 9714 என்ற வாகனம் எங்கள் நிறுவனத்தில் முழுமையாக காப்பீடு செய்யப்பட்டு விபத்து தேதியன்று காப்பீடு அமலில் இருந்தது என்றால் சரிதான். 3ம் நபருக்கு இழப்பீடு வழங்குவதற்கான பிரிமியம் தொகை எங்கள் நிறுவனத்தால் வசூல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்தைப் பொறுத்தவரை மனுதாரர் 3ம் நபர் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தின்

காப்பீட்டு விதிமுறைகள் 3ம் நபரான மனுதாரரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

2. பொதுவாக ஒரு வாகனத்திற்கு பாலிசி கொடுக்கும்போது அனைத்து ஆவணங்களை பரிசீலித்துத்தான் கொடுப்போம் என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு அவ்வாறு ஆவணங்களை பரிசீலித்தோமா என்றால் நேரடியாகப் பார்க்கவில்லை. அவ்வாறு ஆவணங்களை பரிசீலித்திருந்தால் வண்டிக்கு தகுதிச் சான்று இல்லை என்பது தெரிந்திருக்கும் என்றும், வியாபார நோக்கத்திற்காக காப்பீடு வழங்கிவிட்டு தற்போது அதை மறுத்து நிறுவனத்திற்கு ஆதரவாக பொய்யாகச் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரின் வாகன ஓட்டுனர்தான் விபத்திற்கு காரணம் என்றும், அதனால் எங்கள் நிறுவனம் காப்பீடு வழங்கக் கடமைப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. Pay and recovery கொடுக்கக்கூடாது என நான் எதிர்வாதம் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :– இல்லை.

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.11.10 20:26:13 +0530

Additional Sub Judge,
Palani.